செ.வெ.எண்-60 நாள்-23.03.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும், கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக சுற்றறிக்கை மற்றும் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

வட்டார அளவில் உதவி இயக்குநர் நிலையிலான மண்டல அலுவலர்களை நியமித்து கொரோனா தடுப்பு பணிகளை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அனைத்து ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் உள்ள பொது இடங்களில் தினசரி தேவைகேற்ப லைசால் மற்றும் பிளீச்சிங் பவுடர் ஆகிய கிருமி நாசினிகளை Sprayer கொண்டு தெளித்து சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

அனைத்து ஊராட்சி ஒன்றியத்திலும் ஏற்கனவே பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள், தூய்மை காவலர்களுடன் இணைந்து தற்போது கூடுதலாக 60 மஸ்தூர்கள் நியமனம் செய்து கொரோனா தொற்று நோய் தடுப்பு சுகாதார பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அனைத்து அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் கைகழுவும் முறை குறித்து பொது மக்களுக்கு ஒலி பெருக்கி மூலமும், பதாதைகள் வைத்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் பொது இடங்களில் கை கழுவுவதற்காக உரிய நடவடிக்கையாக சோப்பு மற்றும் தண்ணீர் வாளி தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா பேரிடர் பாதிப்பின் தன்மையை பொதுமக்கள் உணர்ந்து செயல்படல் வேண்டும், பயணம் தவிர்த்தல், கூட்டத்திலிருந்து விலகி இருத்தல், சுகாதாரம் பேணுதல், தொடர்ந்து நன்றாக கைகளை கழுவுதல், நோய் தொற்றுக்கான அறிகுறி தென்பட்டால் உடனே மருத்துவரின் ஆலோசனை பெறுதல், வீட்டிற்கு உள்ளேயும், வீட்டிற்கு வெளிபுறத்திலும் கிருமி நாசினி கரைசலை தெளித்தல், பிறர் எவரையும் தொடாமல் இருத்தல் போன்ற விசயங்களை பொதுமக்கள் நன்கு உணர்ந்து செயல்படும் வகையில் போதிய அளவில் Public Address System, துண்டு பிரசுரம் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே மேற்படி அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பதற்கான ஊரக வளர்ச்சித்துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**